விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மார்கழி 11 ரபி-அவ் 10 இதழ் 316

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26—12—82

விசேட மலிவு விற்பனை!
அகலம் குறைக்கப்பட்ட
(மஸ்கனைற்) அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள்
அளவுகள்;
12 அடி X 3 அடி
10 அடி X 3 அடி
8 அடி X 3 அடி
6 அடி X 3 அடி
தொடர்புகள்:
ஆனந்தி அன் கோ
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.
5603

## சீன விமான விபத்தில் 21 பேர் பலி!

பீக்கிங், டிச. 25.
சீனாவில் இன்று ஏற்பட்ட விமான விபத்தொன்றில் 21 பேர் பலியானார்கள்.

சீனாவின் மேற்கு மாகாணத்திலிருந்து காண்டோன் நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த விமானம் திடீரெனத் தீ பற்றியதால் விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி

# அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு இலங்கைவங்கி மேலும் உதவி!

## பொதுமக்கள் பேருதவியும் எதிர்பார்க்கப்படுகின்றது

(ஏ. வி. மாணிக்கம்)

**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் அதிதீவிர சிகிச்சை நிலையத்திற்குத் தேவைப்படும் முக்கிய உபகரணங்கள் வாங்குவதற்கு இலங்கை வங்கி மேலும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களைநன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.**

**மேற்படி வங்கி ஏற்கனவே வழங்கிய உதவியைவிட இது பலமடங்கு அதிகமாகும்.**

ஆஸ்பத்திரியின் அதி தீவிர பிரிவுக்கு உபகரணங்களும் தளபாடங்களும் வாங்குவதற்கு சுமார் 2 கோடி ரூபாய் தேவைப்படலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பொதுமக்களிடமும் சமூக நல ஸ்தாபனங்களிடமும் பரோபகார தனவந்தர்களிடமுமிருந்து இதற்கான நிதி உதவிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

1982 பங்குனி மாதம் அத்திவாரக்கல் இடப்பட்டு சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் இந்த அதிதீவிர சிகிச்சை நிலையம் ஏழுமாதத்துக்குள் கட்டிமுடிக்கப்பட்டது. ஆனால் நிலையம் இயங்குவதற்குத் தேவையான உபகரணங்களும் தளபாடங்களும் வாங்குவதற்கு இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் தேவைபடுவதாக யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் அண்மையில் 'ஈழநாடு' பத்திரிகை மூலம் நிதி உதவி கோரி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இருதய நோய் பரிசோதனைக்கான 6 கருவிகள் இந்த நிலையத்துக்குத் தேவைப்படுகின்றன. இக்கருவி ஒன்றின் விலை 65 ஆயிரம் ரூபாவாகும்.

### இதுவரை கிடைத்த உதவி

இதுவரை கனடிய தூதுவராலயமும் இலங்கை வங்கியும் இரு கருவிகளை வெளிநாட்டிலிருந்து விலைக்கு வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளன.

[8-ம் பக்கம் பார்க்க]

தேசிய இளைஞர் சேவை மன்றம்

## யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு

(புலோலி)

யாழ் மாவட்டத்தின் 1983-ம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கூடுதலான அபிவிருத்தி சேவைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இவ் அபிவிருத்திப்பணிகளுக்கென ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி தெரிவித்தார்.

தேசிய சேவைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மட்டும் இரண்டு லட்சம் ரூபா செலவிடப்படும் என்றும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகளைப் பொறுத்து அவ்வப் போது நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்த இளைஞர் சேவை அதிகாரி திரு. சிவானந்தமூர்த்தி யுவதிகளுக்கான நடமாடும் பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கென 25.000 ரூபா ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

காவலிலுள்ள மதகுருமாருக்காக

## இத்தாலி தேவாலயத்தில் தமிழர் கிறிஸ்தவர் பிரார்த்தனை

ரோம், டிச. 25

இலங்கையில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு இராணுவமுகாம்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மதகுருமார்களுக்காக இத்தாலியிலுள்ள தமிழர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இத்தாலியிலுள்ள சகல தமிழர்களும் பிலிப்பைன்ஸ் நாட்டுக் கிறிஸ்தவ மக்களும் இந்தப்பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

### விசேஷமாகத் திறக்கப்பட்டது

இத்தாலியிலுள்ளமாபெரும் தேவாலயமான பொலிதியாமா தேவாலயத்திலேயே இந்த விசேஷ அனுதாபப் பிரார்த்தனை நடைபெற்றது.

இத் தேவாலயம் 19ம் திகதி மாலை இப்பிரார்த்தனைக்காகவே விசேஷமாகத் திறக்கப்பட்டது. பிற்பகல் 5 மணி முதல் இரவு 7 மணி வரை பிரார்த்தனை நடைபெற்றது.

பிரார்த்தனையின் மூலம் உலக கிறிஸ்தவ மக்களுக்கும் பாப்பாண்டவருக்கும் இலங்கையில் மதகுருமாருக்கு நேர்ந்துள்ள துர்ப்பாக்கிய நிலையை எடுத்துவிளக்குவதற்காகவே முக்கியமாக இப் பிரார்த்தனை மேற்படி தேவாலயத்தில் நடத்தப்பட்டது. (மட்டு.நி)

தீவுப் பகுதிக்கு

## வறட்சி நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை!

### அரச அதிபருக்கு எம். பி. புகார்

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதி மக்களுக்கு வறட்சி நிவாரணப்பணம் இன்னமும் வழங்கப்படாதது குறித்து தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கவலை தெரிவித்து யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன் நேசையாவுக்கு அவசரத்தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்

வறட்சி நிவாரணத்துக்குரிய பணத்தை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் தீவுப்பகுதி எம். பி. அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அனலைதீவு மக்களின் படகுச்சேவைகுறித்தும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபருக்குத் தந்தி ஒன்று அனுப்பி உள்ளார்.

அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''அனலைதீவு மக்கள் படகுச் சேவை (வசதியின்றி மழை காலத்தில் அவதிப்படுகின்றார்கள். அவர்கள் கஷ்டத்தை நான் நேரில் பார்வையிட்டுள்ளேன். எனவே 'அலையரசி' படகுச்சேவையின் 2-வது சேவையைச் செய்வதற்குப் பெருவீதிகள் திணைக்களப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு உதவுக.'' (மா)

### சேவை நீடிப்பு

[கொழும்பு]

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவை

(8-ம் பக்கம் பார்க்க)

## பெருமாள் கோவிலில் சுவர்க்க வாயில் ஏகாதசி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேசவரதராசப் பெருமாள் கோவிலில் இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இன்று காலை சுவர்க்கவாயில் திறக்கப்படும். அதைத் தொடர்ந்து விசேஷ பூசைகள் இடம்பெறும். இரவு செல்வி மனோகரி கணேசசுந்தரம் ''கண்ணன் கடாட்சம்'' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். மற்றும் உபந்நியாசம், சொற்பொழிவு, கூட்டுப்பிரார்த்தனை, பஜனைப்பாடல்களும் இடம்பெறவுள்ளன. (மா)

யாழ்ப்பாணத்தில்

## ஆடம்பரமின்றி கிறிஸ்மஸ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள், கிறிஸ்மஸ் தினத்தை ஆடம்பரமற்ற முறையில் மிகவும் அமைதியாக நேற்றுக் கொண்டாடினர்.

கிறிஸ்தவ மதகுருமார், பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பதிகள், தமிழ் இளைஞர்கள் ஆகியோர் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் விசாரணையில் இருப்பதால் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து, கிறிஸ்மஸ்தினத்தை ஆடம்பரமற்றமுறையில் கொண்டாட வேண்டுமென்று பல கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் நள்ளிரவு பாலன் பிறப்பை ஒட்டிய அறிவிப்பு நிகழ்ச்சியும் வழமை போல குதூகலமாக அமைந்திருக்கவில்லை. பாண்ட் வாத்தியசகிதம் சோக கீதங்களை இசைத்துக்கொண்டு கிறிஸ்தவர்கள் ஊர்வலம் சென்றனர்.

கடந்தவருடங்கள் போன்று நள்ளிரவில் பாலன் பிறப்பை அறிவிக்கும் தொடர்ச்சியான

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு உடையார் லேனில் 5½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருநாவுக்கரசு அன்ட் சன்ஸ், பலாலி ரோட், கோண்டாவில். 5574

காங்கேசன்துறை கீரிமலை வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: Paul, 83, Ward Place, Colombo-7. 5533

யாழ். மருத்துவக்கல்லூரிக்கு அண்மையில் 2½ பரப்பு வீடு கட்ட உகந்த காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 51/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 5444

தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டார் 1½'' பம்பு உடன் விற்பனைக்கு உண்டு. உடையார் வழவு கிராமக்கோட்டு வீதி, மயிலிட்டி. 5584

சாவகச்சேரி நகரில் இருந்து ½ மைல் தூரத்தில், டச்சு வீதியில் 6 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம்: 5588, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5588

யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து அரை மைல் தூரத்தில் கண்டி வீதியில் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ, பிரித்து துண்டுகளாகவோ விரும்பிய அளவு பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு: 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம் முகவரியில் தொடர்புகொள்ளவும் தொலைபேசி: 23175. (5626)

நல்லூர் கோவிலுக்கருகாமையில் கோவில் வீதியில் அமைந்துள்ள 1½ பரப்பு விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட உகந்தது. உடன் தொடர்புகொள்ளவும். செ. கனகரத்தினம், 156, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 5622

## தேவை

ஸ்ருடியோர் வேலைகளும், றபர் சீல் வேலைகளும் பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் தேவை. தரன் ஸ்ருடியோ, 9, 8, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். போன்: 23858. (5604)

விற்பனையாகின்றன;
இறக்குமதி
செய்யப்பட்ட
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக் கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்
**இப்ராகிம்**
**ஜபார்ஜி,**
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409

## தேவை

நல்லூரில் ஆரம்பிக்கவிருக்கும் ஆங்கில மருந்துச்சாலைக்கு உதவி ஆட்கள் தேவை. ஆங்கில அறிவுடைய இரு பாலாரும் 31-12-82ற்கு முன்பு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5625, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5625

பல சரக்கு வியாபாரத்தில் நன்கு அநுபவம் வாய்ந்த 25 வயதுக்குட்பட்ட நல்லொழுக்கமுள்ள பையனும், மினி பஸ் கண்டக்டரும் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாணப்பகுதிகளில் உள்ளோர் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு; நல்லைக்குமார் அன் கொம்பனி, 152-154, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 5627

யாழ். இரண்டு மைல் எல்லைக்குள் புதிய அல்லது பழைய வீட்டுடன் காணி தேவை. சகல விபரங்களுடன் எழுத்து மூலம் அறிவிக்கவும். முகவரி: ''SHABRA''. 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (5610)

## சேவை

திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை – தருமபுரம் சுவாமிநாதன், சீதாமணி ஸ்ரீனிவாஸன், சுலோசனா மகாதேவன் பாடியவை. ஒலிப்பதிவு செய்து கொடுக்கிறோம். ''துர்க்காஸ்''. 68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 5628

## வாடகைக்கு

510 காங்கேசன்துறை வீதியில் (தட்டாதெருசந்தி) வீடும், கடையும் வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். பொ. மயில்வாகனம், C/o கந்தசாமி, கயந்தப்பை, தெல்லிப்பளை மேற்கு. 5609

## தவறிவிட்டது

EL 9542, 82 ஸ்ரீ 5174ம் இலக்கங்களைக் கொண்ட முறையே மோட்டார் கார், மோட்டார் சைக்கிளுடைய பதிவுப்புத்தகங்கள், 1983ம் ஆண்டுக்குரிய வரி லைசென்ஸ்கள், காப்புறுதிப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் கச்சேரிக்கும் வைமன் ரோட்டுக்குமிடையே தவறிவிட்டன. இவற்றைப் பற்றித் தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அறிவிக்க வேண்டிய விலாசம்: 51, வைமன் ரோட், யாழ்ப்பாணம். 5621

21-12-82ந் திகதி யாழ். பிரதம தபால் கந்தோரிலாக இருக்கலாம் ஆண்கள் கைப்பை (Brown) தவறிவிட்டது. பையின் ஒரு மூலையில் லூப் உள்ளது. உள்ளே இரண்டு வெள்ளிநிற திறப்புகள் உண்டு. கண்டெடுத்து தருபவருக்கு சிறந்த சன்மானம் வழங்கப்படும். எஸ் செல்வநாயகம், 151, கோவில் வீதி, நல்லூர் 5618

## முதியோர் தினவிழா

(மயிலிட்டி)

மயிலிட்டி தெற்கு – கட்டுவன் கிராமோதய சபைகளின் முதியோர் தினவிழா இம்மாதம் 31ம் திகதி நடைபெறும். இருகிராமோதய சபைகளும் தனித்தனியே இவ்விழாவினை நடத்துகின்றன.

## 500 பேர் ஆசிரிய பயிற்சிக்கு தெரிவு

(கொழும்பு)

ஜனவரியிலிருந்து நாட்டிலுள்ள 24 ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் பொருட்டு 500 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேயளவு ஆசிரியர்கள் புதிய ஆண்டிலிருந்து நாடு முழுவதிலுமுள்ள பல பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வேலைக்கு அமர்த்தப்படுவர். (கி)

காரைநகர் சிவன்கோவில்
**கோபுரத் திருப்பணி**
மேற்படி திருப்பணிக்கு இயன்ற பண உதவி செய்யுமாறு இறைவனடியார்களைக் கேட்டுக்கொள்கிறோம்.
நிதி உதவியை
கோவில் திருப்பணிச்சபைக் காரியாலயத்தில்
பொருளாளர் வே. சிவசுப்பிரமணியம்
உப பொருளாளர் சி. சிவலிங்கம் அவர்களிடம்
கொடுத்து றிசீற் பெற்றுக்கொள்ளவும்.
வங்கிக் கணக்கு 6814 இலங்கை வங்கி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இங்ஙனம்
தலைவர்,
திருப்பணிச்சபை,
(4972)

**தொழிற்பயிற்சி**
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்
நடாத்தும்
**வட்டு. தொண்டேயம்**
தொழிற்பயிற்சி நிலையத்துக்கு
பின்வரும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.

1. மின்னியல் 6 மாதம்
2. வெல்டிங் 6 மாதம்
3. இயந்திர இயல் 6 மாதம்
4. தட்டெழுத்து (ஆங்கிலம்) 6 மாதம்
5. சுருக்கெழுத்து (ஆங்கிலம்) 1 வருடம்
6. பிரயோக இயந்திர இயல் 6 மாதம்

தொழிலாளரதும் மாணவரதும் நலன் கருதி
போதனை முறையாகவும் செய்கை முறையாகவும்
''மாலை நேர வகுப்புகள் தேர்ச்சி பெற்ற
ஆசிரியர்களால்''
நடாத்தப்படும்.
''மாதக்கட்டணம் 25/-''
உடன் தொடர்பு கொள்ளவும்:
இயக்குனர்,
வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சிநிலையம்,
சித்தன்கேணி. (5617)

31-வது நாள்
நினைவாஞ்சலியும் நன்றிநவிலலும்
**அந்தியேட்டி அழைப்பும்**
**நாகமுத்து செல்வநாயகம்**
தோற்றம்: 29-9-1923 மறைவு: 27-11-1982



இறையருளால் எம்மை ஈன்றெடுத்து கண்ணை இமை காப்பதுபோல பேணி வளர்த்து ஆருத்துயரில் ஆழ்த்தி இறைவனடிசேர்ந்த எமது அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் ஈமக்கிரியைகளில் கலந்து பல்வகையிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைக் கூறி எங்கள் இல்லத்தில்
27-12-82 திங்கட்கிழமை
நடைபெறும்
**அந்தியேட்டிக்கிரியையிலும்**
கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
26, அராலி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (5615)

## பரந்தன் வை. எம். எம். சி. ஏக்கு
# எம். பி. பாராட்டு

(கிளிநொச்சி)

''வடபகுதி சமூகசேவை ஸ்தாபனங்களில் பரந்தன் வை. எம். சி. ஏ. இளைஞர் பயிற்சி நிலையம் தன்னலமற்ற சேவை ஆற்றிவருவது பாராட்டிற்குரியது''. என்று கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பரந்தன் வை. எம். சி. ஏ. இயக்கத்தின் ஆதரவுடன் 'மில்க்வைற்' ஸ்தாபனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

இளைஞர் பயிற்சி நிலைய முன்பாக நிலையப் பணிப்பாளரும் சமூக சேவையாளருமாகிய திரு ஏ. ரி. எதிர்வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். திரு. ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது;-

''பொதுச் சேவையாற்றும் சமூகஸ்தாபனங்கள் தன்னலம் கருதா சேவையாற்ற வேண்டும். சுரண்டல் அற்ற நிர்வாகம்தான் மக்களால் மதிக்கப்படும். இந்த வகையில் பரந்தன் வை. எம். சி. ஏ இளைஞர் பயிற்சி நிலையத்தினரின் சேவை போற்றுதற்குரியது. இவ்வாறான ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கு மில்க்வைற் ஸ்தாபன அதிபர் கொடைவள்ளல் கனகராசா போன்றோர் உந்து சக்தியாக விளங்குவதும் வரவேற்கத்தக்க செயலாகும் என்றார்.

## யாழ். மாநகராட்சி மன்ற விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற விசேட கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. (மா)

## பொன்னாலை வரதராஜர் ஏகாதசி தேர்

(சுளிபுரம்)

இன்று ஞாயிறு அதிகாலை வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு சங்காபிஷேகம் நிகழும்.

அதைத் தொடர்ந்து வசந்தமண்டபபூஜையும் அரங்கநாதருக்குவிசேடபூசையும் நிகழ்ந்த பின் திருப்பாவை ஓதப்படும்.

பகல் தேர்த்திருவிழாவும் இரவு ஏகாதசி புராணபடனமும் நிகழும். [ப]


யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# “பாவங்களிலிருந்தும் மீள 'யேசுகிறிஸ்து' காட்டிய பாதையே ஒரே வழி!”

## பாப்பரசரின் நத்தார் செய்தி

ரோம், டிச. 25
“பாவங்களிலிருந்தும் மீள்வதற்கு யேசுகிறிஸ்து காட்டிய பாதையே ஒரே ஒரு வழியாகும்'' என்று பரிசுத்த பாப்பரசர் தமது நத்தார்தின பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

பரிசுத்தபாப்பரசர் தமது இந்த நத்தார் விசேட பிரசங்கத்தை செள். பீட்டர்ஸ் சதுக்க தேவாலயத்தில் நிகழ்த்தினார். கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனைகளின் பின்னர் பாப்பரசர் இந்த ஆலய உப்பரிகையில் நின்று தமதுபிரசங்கத்தை நிகழ்த்துவது ஒரு சம்பிரதாய பூர்வ நிகழ்ச்சியாகும்

இத்தடவை பாப்பரசரின் நத்தார் பிரசங்கம் 'கிறிஸ்துவின் பிறப்பும் அவரது வல்லமைகளும்' என்ற பொருளில் அமைந்திருந்தது. இதனை நத்தார்தின செய்தியாக வத்திக்கான்வெளியிட்டுவைக்கும்.

பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் வழமைபோல சென் பீட்டர்ஸ் சதுக்க ஆராதனைகளில் இம்முறையும் கலந்துகொண்டனர்.

பாப்பரசர் மேலும், உலக நாடுகளில் அதிகரித்துவரும், யுத்தபீதி, மோதல்கள் என்பன தணிவடையவேண்டுமென்றும் தமது பிரசங்கத்தின் போது பிரார்த்தித்தார். (கி)

### பிரெஞ்சுப் பொலிசாரின் தனித்துவம்!

பாரிஸ், டிச. 25
பிரான்ஸ்தேச பொலிஸார் உலகில் மிகவும் பெயர்பெற்ற புலன்விசாரணை வல்லுனர்களும், பாதுகாப்பு ஏற்பாட்டாளர்களும் என்பது சகலரும் அறிந்ததே!

இவற்றில் இவர்கள் விதிவிலக்கானவர்கள் எனக் குறிப்பிடமுடியாது! ஏனெனில்ஐரோப்பிய நாடுகளையும், வேறு சில நாடுகளையும் சேர்ந்த பொலிஸாரும் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

ஆனல், தமக்கென ஒரு தனித்துவத்தைப் பேணி உலகின் கவனத்தைப்பெறும் வகையில் பிரெஞ்சுப் பொலிஸார் இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகையின் போது நடந்து கொண்டுள்ளனர்

தற்போது நிலவும் சடுங்குளிரின் மத்தியில் அதேயளவு பசியுடன் காட்சியறைகளில்காணப்படும் உயர்ரக பண்டங்களைக்கண்டு நாவில்நீர் ஊறநிற்கும் ஏழைகளுக்கு சுடச்சுட 'சூப்'வகைகளையும், சுவைமிக்க இனிப்புப் பண்டங்களையும் தமது கிறிஸ்மஸ் அன்பளிப்பாக அவர்களைத்தேடிச் சென்று பிரெஞ்சுப் பொலிஸார் வழங்குகின்றனர்!

தமது வண்டிகளில் நகரின் முக்கிய இடங்களில் பின்தங்கிய ஏழைகள் வாழும் பகுதிகளுக்கு வரைபடங்களின் உதவியுடன் சென்று உயர்ரக உணவுகளை வழங்குகின்றனர்.

இவர்களின் சிலவண்டிகள் நடமாடும் உணவுச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. பல பாதசாரிகள் இவ் வண்டிகளில் மிக சுகாதாரமான முறையில் தயாரான பானவகைகளையும், உணவுப்பண்டங்களையும், பொலிஸாரிடமிருந்துபெற்றுச்செல்கின்றனர். (கி)

## போலந்தில் அமைதியான கிறிஸ்மஸ்!

வார்ஸோ, டிச. 25
போலந்தில் இவ்வருடம் மிகஅமைதியாக நத்தார் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. கடந்த ஆண்டு இம் மாதப் பகுதியிலேயே இங்கு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று பல போலந்து மக்கள் 'கிறிஸ்மஸ்' தினத்தைத் துக்கதினமாகவே கழித்தனர்.

ஒருவருடத்தின்பின்னர் இம்முறை இராணுவ ஆட்சி ஒரிரு தினங்களில் தளர்த்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த ஆண்டில் கைதான நூற்றுக்கணக்கான சொலிடாறிற்றி தொழிற்சங்கத்தவரையும் இராணுவ ஆட்சியாளர் விடுதலை செய்துள்ளனர்.

ஆனல் இராணுவ ஆட்சியின் சீர்கேடுகளினாலும், அரசியல் பூசல்களினாலும் போலந்தின் பொருளாதார நிலைமை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது அத்துடன் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் யானைவிலை, குதிரை விலையாக உள்ளன.

இக்காரணங்களினாலேயே இங்குபொதுமக்கள் இம்முறை 'கிறிஸ்மஸ்' பண்டிகையை மிக எளிமையாகவும், அடக்கத்துடனும் கொண்டாடுகின்றார்கள்.

பெரும்கத்தோலிக்க நாடும், பரிசுத்த பாப்பரசரின் பிறப்பிடமுமான போலந்து, உலகில் 'கிறிஸ்மஸ்' கொண்டாட்டங்களுக்கு பெயர்பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### 1200 கைதிகள் விடுதலை!

ஸியோல், டிச. 25
சிறுகுற்றங்களுக்காக சிறைத்தண்டனைகளை அனுபவித்து வந்த சுமார் 1200 கைதிகளை தென்கொரிய அரசாங்கம் விடுதலைசெய்துள்ளது.

'கிறிஸ்மஸ்' பண்டிகையை முன்னிட்டே இவர்களுக்கு இவ் விடுதலை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (கி)

## பெத்லஹெமில் வழமையான குதூகலத்துடன் 'நத்தார்'!

### யாத்திரீகர் தொகை குறைவு!

பெத்லஹெம், டிச. 25
“யேசுகிறிஸ்து நாதர்'' அவதரித்த பூமியான 'பெத்லஹெம்' நகரில் 'கிறிஸ்மஸ்' இரவு மிகுந்த குதூகலத்துடன் நேற்று கொண்டாடப்பட்டது

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள ஜெருசலத்தின் ஒரு சிறு பகுதியே 'பெத்லஹெம்' இங்கு அரபுதேசும் மக்களே பெருந்தொகையினராக இருக்கின்றனர்.

வழமை போலவே 'பெத்லஹெம்' நகர கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நேற்றிரவு இங்கு வெகுவாக களைகட்டியிருந்தன. ஆயினும் அண்மையில் நடந்துமுடிந்த மேற்காசியப் போர் பதட்டம் முற்றிலும் தணிந்துவிடாத காரணத்தினால், இங்கு கூடும் நத்தார் யாத்திரிகர்களின் அளவு கடந்த ஆண்டுகளை விடக் குறைவாகவே காணப்பட்டது.

பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று இந்நகரில் போடப்பட்டிருந்தன. (கி)

## தென்துருவத்தின் அருகில் இந்திய விஞ்ஞானிகள்!

புதுடில்லி, டிச 25
'அந்தாட்டிக்' சமுத்திரத்தில் ஆய்வுகளை நடத்த சென்றிருக்கும் இந்திய விஞ்ஞானிகள் குழு அடுத்தவாரம் 'அந்தாட்டிக்' பனி உறை நிலப்பிரதேசத்தைச் சென்றடையும்.

இக்குழுவில் 28 ஆராய்ச்சியாளர்கள் இருக்கின்றனர். இவர்களில் கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் இருக்கின்றனர்.

'போலர் சேர்க்கிள்' (துருவ வட்டம்) என்ற நோர்வே நாட்டுக்கப்பலை வாடகைக்கு அமர்த்தியே இவர்கள் 'அந்தாட்டிக்'செல்கின்றனர்.

இக்கப்பல் தென்துருவத்தில் பல மைல் தூரம் பரவியிருக்கும் பனிக்கட்டி படிவுகளை ஊடறுத்துச் செல்லும் சக்தி மிக்கது.

'அந்தாட்டிக்' பிராந்தியத்தில் ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவுவதற்கான இடத்தை தேர்ந்தெடுப்பதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும். (கி)

## “நாட்டு மக்கள்மீது பெரும் தேர்தல் மோசடி”

### - சிறிமாவோ

(கொழும்பு)
“நாட்டு மக்கள்மீது பெரும் தேர்தல் மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்று முன்னாள் பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா மக்கள் தீர்ப்பு முடிவுகள் வெளியானதையடுத்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- “மக்கள் தீர்ப்பு நேர்மையான முறையில், நியாயமாக நடத்தப்படவில்லை இதனல் உலக அரசியல் இலங்கையின் நிலை சிரிப்புக்கிடமாகியுள்ளது.

தொம்பே, அத்தனகல தொகுதிகளில் ஐ. தே. க. வின் அட்டகாசம் மலிந்திருந்தது அத்தொகுதிகளில் உள்ள வாக்காளர் பலரின் வாக்குச் சீட்டுகளும் அழிக்கப்பட்டுள்ளன இந்த வன்முறைகளையடுத்தே ஜனதிபதியுடனும், பொலிஸ்மா அதிபருடனும் நான் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

இம்முறை வாக்களிப்பில் பெரும் ஆள்மாறாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. ஜனதிபதித்தேர்தல் வேட்பாளரான திரு ஹெக்டர் கொப்பேகடுவவினது வாக்குச்சீட்டு ஏற்கனவே பாவிக்கப்பட்டுள்ளது. திருமதி. கொப்பேகடுவவிற்கு கூட இந்தநிலையே ஏற்பட்

(6-ம் பக்கம் பார்க்க)

## ‘பொதுத்தேர்தல் நடப்பதையே தமிழ்மக்கள் விரும்புகிறார்கள்’

### அமிர்தலிங்கம் கருத்து

(கொழும்பு)
'தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையை ஏற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்கள் பொதுத்தேர்தல் ஒன்று வேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களித்திருக்கிறார்கள். இதற்காக முதலில் நாம் அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.'

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்புத் தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு.அமிர்தலிங்கம் மேலும் அபிப்பிராயம் தெரிவிக்கையில், 'குறிப்பாக மட்டக்களப்பு, பொத்துவில், கல்குடாத் தொகுதி தமிழ் வாக்காளர்கள் ஆளும் கட்சிப் பிரதிநிதிகளை நிராகரித்திருப்பது கூட்டணிக்கு மிகப்பெரிய வெற்றியாகும். மக்கள் கருத்தை அரசு மதித்து கூட்டணியிடமிருந்து அபகரித்துக்கொண்ட பொத்துவில் மட்டக்களப்புத் தொகுதிகளின் பிரதிநிதித்துவத்தை கூட்டணியிடமே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என வற்புறுத்த விரும்புகின்றோம் மக்கள் தீர்ப்புக்கு அரசு தலைவணங்க வேண்டும். மிகக்குறுகியகாலபிரசாரத்தையடுத்துயாழ்ப்பாணம்,வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மக்கள் கட்டுக்கோப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையைஏற்று வாக்களித்துள்ளார்கள். நாம் ஏற்கனவே தீர்மானித்தபடி வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறப்பதா என்பது பற்றி முடிவு செய்யப்படும். அந்த முடிவின்படி நாம் நடப்போம்.

பொதுத் தேர்தல் ஒத்திப் போடப்படுவதை தமிழ்மக்கள் விரும்பவில்லை என்பதை இந்த பொதுசன வாக்கெடுப்பு எடுத்துக்காட்டி விட்டதாகத்தெரிவித்துள்ளார். (இ)

### ஆங்கில தினவிழா

(மன்னார்
மன்னார் புனித சவேரியார் பெண்கள் மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழக்ளழமை ஆங்கில தினவிழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி பி ஆறுமுகம், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு பி எம். செபமாலை ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ணர். (அ)


தொண்டைக் கரகரப்புக்கு நிவாரணம் பெற ஹக்ஸ்



தற்போது கிடைப்பது 2 வகைச் சுவையில்
ஹக்ஸ் அசல் ‘மென்தோல்’ ‘யூக்கலிப்டஸ்’ சுவை கொண்டது.

இறக்குமதி, விநியோகம்: டார்லி பட்லர் அன்ட் கொம்பனி லிமிட்டெட்.
db DARLEY BUTLER

# திருவாசகத்தேன்!

திருவாசகம் என்பது பிறிதொன்றிற்கில்லாத அழகினை உடைய வாசகம் என்னும் பொருட்டாம்- திருவாசகம் வேற்றுமைத்தொகைப்புறத்து பிறந்த அன்மொழித்தொகை. இதனை ஆகுபெயர் என்பாரு முளர் ஆயினும் உண்மையினை நோக்குவார்க்கு இஃது அன்மொழித்தொகையே ஆவதல்லது ஆகுபெயர் ஆகாமை உணர்க-என்று ஆசிரியர் சிவஞானயோகிகள் கூறுதலின் ஈண்டுக் கூறியதே பொருத்தமாம் எனக.

பற்றியதும், அவ்வருள் ஒளியைநாடிச்சென்று கனிந்த ஒரு சிற்றுயிர்க்கு உற்ற பல திறப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றியதும் ஆகும். சிந்தை சென்று அணுகிலாதவைகளை பண் இனிமையும் பொருட் செறிவும்மிக்க சொற்களால் அமைத்துக் கற்பவர் பயிற்சிக்கும் பண்புக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள் தருமாறு மக்கள் உலகத்துக்கு அளித்த வள்ளன்மை திருவாசகத்துக்கே உரியதாகும்- வினையினை நீங்கி விளங்கிய

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்

தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச்செய்து அவரைப் பேரின்பப் பெருக்கில் ஆழ்த்துவதற்கு பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத்திருவாசக நூல் உடைமையால் இதனிலும் மேலான அழகினைப்பெற்ற வேறொரு நூல் இல்லை என்பது தேற்றமாம். அன்புபொதிந்த இதன் செய்யுட்களை ஓதுந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் பெருக நாவுரை குழற மெய் மயிர் சிலிப்பப் பேரின்ப வெள்ளம் கிளர்ந்து எழுதல் யாவர்மாட்டும் காணப்படுதலாலும் தொடர்புபட்டு நிகளும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றை நூல்களை ஓதுவார் நினைப்பாரிடத்து காணப்படாமையாலும் இத் திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கில்லாத அழகினை உடையது என்பது தெளியப்படும். இது மறைமலை அடிகள் தம் கூற்றும்.

மற்றுமோர் உரையாசிரியர் கூறுகின்றார், எந்நாட்டவராலும் எக்காலத்தவராலும் உள்ளம் உகந்து ஏற்றுக் கொள்ளுமாறு என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மைகளையோ. நெறிகளையோ, சிந்தைக்கும் செவிக்கும் இனி செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியம் என அறிமுர் ஓர் இலக்கணம் வகுப்பராதல் திருவாசகம் உலக இலக்கியங்களுள் தலைசிறந்த ஒன்றாகுமெனு நாம் உறுதியாகக்கொள்ளலாம். திருவாசகத்தில் பேசப்பெறும் செய்தியானது காலம் இடம் என்னும் வேறுபாடுகளைக்கடந்து சிந்தை செல்லா சேணகத்ததாய் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழப்பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பின்னைப்புதுமையதாய் நின்றதொரு பேரருட் பிழம்பைப்


அறிவின் முனைவராகிய மணிவாசகப்பெருமான் சிவானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்து அருளிய இம்முழு முதல் நூலாகிய திருவாசகம் உலக இலக்கியங்களுள் ஒரு தனி இடம்வகிப்பதாகும், இந் நூல்மொழிக்கு மொழி தேன் ஒழுகும் தன்மையது. இதுபக் திச்சுவைநனிசொட்டசொட்ட நாம் உள்ளத்தை உருக்கும் பான்மையது. பல முகங்களும் பட்டைகளும் தீர்ந்த ஒரு வைரக்குன்றம் எவ்வாறு கதிர் ஒளிக்கு ஏற்பவும் காண்பவர் நிற்கும்கோணத்திற்கேற்பவும் சிறந்ததன் ஒளியின்பகுதிகளைக் காட்டுமோ அவ்வாறுபொருள் காட்டி உணர்வூட்டுவது இத் தெய்வநூல், ஒவ்வொருசொல்லும் நம்மை உணர்வுதந்து உய்யக் கொள்ளத்தக்கது சித்தம் சிவமான செம்மலின் செஞ்சொற்றெகுதியே திருவாசகம்.

''நாயேனைத் தன் அடிகள் பாடுவித்த நாயகன்'' சிவபிரான் என்கிறார் வாதவூரடிகள். அவனருளாலே அவன்றாள்வணங்கி சிவனருள் செறிந்த தீந்தமிழ் மொழியால் திருவாசகம் பாடிய வாதவூர் வள்ளல், தாம் ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளர் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப்பணிந்து'' என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். அவர் சொல்லிய பாட்டாகிய திருவாசகத்தின் பொருள் அம்பலத்துள் நட்டம் பயில்றும் நாதனேதான் என்று மணிவாசகப் பெருமானே அன்று தில்லை மூவாயிரவர்க்கு அறிவுறுத்தியுள்ளார். ''பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ளம் மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமோ வாசகம் அதற்கு வாக்கியம் – தூசகல் அக்குல்

வேய்த் தோளிடத்தவனே'' என்று பாடுகின்றார். எனவே திருவாசகமும் சிவபெருமானும் சொல்லும் பொருளும் போல் ஒன்றித்து நிற்கின்றதைக் காண்கின்றோம். அதேபோல் திருவாசகத்திற்கும் நடராசாவிற்கும் பல பொருத்தங்கள் இருப்பதையும் நாம் காண்கின்றோம்.

நடராசப் பெருமானே ஓங்காரமாகிய பிரணவ வடிவினர். அவர்தம் கரத்திலுள்ள துடியை முதன் முதலாக ஒலித்தார். அவ்வாதி ஒலியாகிய 'ஓம்' என்னும் கீழே வீழ்வதற்குள்ள 51 எழுத்துக்களாய்ப் பிரிந்து பரிணமித்து ஒலித்தது. அந்த 51 அட்சரங்கள்தாம் வர்ணம் எனப்பட்டன, அந்த வர்ண

(5-ம் பக்கம் பார்க்க)



பொதுசன வாக்கெடுப்பின் முடிவுகளைச் சம்பிரதாயப் பூர்வமாக தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்தடி சில்வா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தனாவிடம் கையளிக்கும் காட்சி. ஜனாதிபதியின் செயலாளர் திரு. மெனிக்டிவெலவும் படத்தில் காணப்படுகின்றார்.

# அடியவர்கள் இருவிதம்

சிவனடியார்களில் சிலர் பழையவர். பரிபக்குவம் உற்றவர். பரமனைப்பற்றிப் பலவாகப் பயின்றவர். புதுஅடியார்கள் புத்தடியார்கள் புன்மை உள்ளவர். எதுசெய்ய வேண்டும், எப்போது செய்தல்வேண்டும் என்ற நியதி நேரம் தெரியாதவர்கள்.

முந்திய பிறப்புக்களில் செய்த சிவபுண்ணியங்களின் விளைவாகப் பரிபாகமுற்றவர்கள் பழவடியார்கள். அவர்கள் சிவஞானம் கைவரப்பெற்றவர்கள். அவர்கள் தாம்பெற்ற

க.சி. குலரத்தினம்

இன்பம்பெறுக இவ்வையகம் என்னும் இரக்கக்குணத்தில் புத்தடியார்களை இறைவன் வணக்கத்துக்கு அழைக்க வருகிறார்கள்.

## கடவுள் ஒருவர்

கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் சிவபெருமான். அவரை ஆயிரம் திருநாமம் சொல்லி அகிலமெல்லாம் போற்றும். சிவபெருமான் வேதங்களின் முதலிலும் நடுவிலும் இறுதியிலும் உள்ளவர். வேதவிழுப் பொருளாயுள்ளவர். அவர் வேதவிழுப்பொருள். அவர் கண்ணுக்கு இனியவர். அவரைக்கசிந்துருகப்பாடி அவரருள்பெறுதல் பிறவிப்பயன். ஞானத்தைத் துணையாகக் கொண்டு கடவுளை அறிவதற்கு முற்படும் அடியவருக்கு அவர் விழுப்பொருளாகக் காட்சி

யளிப்பர். அப்போது இறைவன் தேவதேவன் என்னும் பெருமை உணர்வில் உதிக்கும்.

## திருமாலும் நான்முகனும் அறியமுடியாத சிவன்

சிவபெருமான் சோதிசொரூபராய் அக்கினிப் பிழம்பாய் அண்ணாமலையாய்க் காட்சி கொடுத்தருளியும் மயக்கத்தையுடைய திருமாலும், ஒருமுகப்பட்ட அறிவினைக்கொள்ளாத நான்முகனும் சிவபெருமானை அறியமுடியவில்லை.

சிவபெருமான் மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் பிறவுலகங்களுக்கும் எட்டாதவராய் அறியமுடியாதவராய் பெருமையுடையவராய் உள்ளார். அவரை வெறும் பாசஞானத்தால், நூலறிவால் அறியமுடியாது. அவரைப் புறக்கண்ணாற்காணமுடியாது. 'ஊனக்கண்ணாற் காணமுடியாது' என்பது சாத்திரப் பொருள்.

## அன்பர்கள் அறியவருபவர்கள்

சிவபெருமான் அருவமாய், அருவுருவமாய், உருவமாய் அன்பர்களுக்கு அருளுவர். அருவமாய் உள்நின்று உணர்த்தியருளுதல், [illegible] திருமேனி கொண்டு காட்சிகொடுத்தருளுதல், குருவேடந்தாங்கி எழுந்

(8-ம் பக்கம் பார்க்க)

# யார் இவர்கள்?

யாழ். நகரில் இரவு நேரம்.

மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கிறார் ஒருவர் பிரபலமகளிர்கல்லூரி ஒன்றிற்கருகில் துப்பாக்கி ஏந்திய சில இளைஞர்கள் தடுத்து நிறுத்துகிறார்கள் இவரை அருகில் ஒரு ஜீப் வண்டி ஓரமாக சற்று மறைவான இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களில் சிலர் குறுந்தாடி வளர்த்திருக்கிறார்கள்-மற்றவர்கள் 'கிளீன் ஷேவ்'-சிவில்உடை.

மோட்டார் சைக்கிள்காரருக்கு பலவிதமான யோசனை- இவர்கள்யார் இரகசியப்பொலிசாரா?-அல்லது சிவில் உடையில் இராணுவத்தினரா? அல்லது துப்பாக்கி ஏந்திய கொள்ளைக்காரர்களா?

அவர் ஒரு தீர்மானத்துக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# தேவன் பிறந்தார்

பிறந்தனன் தேவன் என்றே
  பெருவிழாப் பூண்ட வானில்
நிறைந்தது ஒளியின் வெள்ளம்
  நிலவதன் அழகுக் கோலம்
திறந்த கண்மூடா அந்த
  தேவதைக் கூட்ட மெல்லாம்
மறந்தது எல்லாம் ஆங்கே
  மகிழ் வெனும் கடலே ஓடும்!

பாடினர் வாழ்த்துக் கோடி
  பரவசக் கடலில் மூழ்கி
ஆடினர்! அதனைக் காண
  ஆயிரம் கண்கள் வேண்டும்!
ஈடில்லாக் காட்சி தன்னை
  இகமது காணு தன்று
மூடிய தேனோ கண்கள்:
  மூடரோ சனங்க ளெல்லாம்

பரத்தினை ஆளுந் தேவன்
  பரிசுத்த பிதாவே ஈந்த
வரத்தினால் பிறந்த யேசு
  வையகம் தன்னை மீட்க
தரத்தினை மாற்றி ஏழை
  தச்சரின் மகனாய் ஆனார்
கருத்தினை அறிந்தே நாமும்
  காலடி பணிவோம் வாரீர்!

கடலது துதிக்கும், மெல்ல
  காற்றது பணியும், வந்து
இடையரும் வீழ்வர், அந்த
  எருதுகள், ஆடு தானும்
உடையவன் என்றே எண்ணி
  ஊமையாய் வணங்கும் போது
தடையென்ன மனிதா உத்தன்
  தலைவனை வணங்கிப் போற்று!

-- வாகரைவாணன்

★ புத்தாண்டு வைபவங்கள் சிறப்புற

★ எவர்சில்வர் பொருட்கள் ★ மின் விசிறிகள் ★ றேடியோக்கள்
★ மணிக்கூடுகள் ★ திருமணம் மற்றும் வைபவங்களுக்கான
★ வெடிங்காட் பேப்பர் றேகப் ★ கரண்டிகள்
★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ சி. ஐ. சி. கெமிபிக்ஸ் ★ பைன்டிங் கம் ★ காகிதாதிகள்
அனைத்திற்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கைத் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள் — மின்சார ஒப்பந்தகாரர்கள்)

(கடைத்தெரு பிள்ளையார்கோவில் முன்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291

தலைமையகம்:

பேர்ள் லேட்ஸ் அம்பலவாணர் அன் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11. போன்: 24821 — 28244

லெட்சுமிபவான், 97, ஒல்கொட் மாவத்த, கொழும்பு 11. போன்: 24821

தமிழ்ப் பிரதேச முடிவுகள்

# யு.என்.பி.-கூட்டணிக்கெதிராக நம்பிக்கைஇல்லா தீர்மானம்

## குமார் விடுத்துள்ள அறிக்கை

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக யாழ்ப்பாணம், வன்னி, திருமலை, மட்டுநகர் தேர்தல் மாவட்டங்கள் வாக்களித்ததையிட்டுத் தமிழ்க் காங்கிரஸ் மகிழ்ச்சியடைகிறது. இம்மாவட்டங்களிலுள்ள தமிழ் வாக்காளர்களுக்கு எமது நன்றியை முகமலர்ந்து தெரிவித்துக்கொள்கிறோம்.


இம்மாவட்டங்களிலுள்ள மக்கள் தமது தற்போதைய பாராளுமன்றப் பிரதிநிதிகள் 1983-ம் ஆண்டு ஆடி மாதத்தின்பின், ஒரு நாளேனும் தங்களின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடாது என்பதைத் திட்டவட்டமாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்த நான்கு மாவட்டங்களில் யு. என். பி. கூட்டணிப் பிரதிநிதிகள் மாத்திரமே பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கின்றனர்கள். ஆகையால் இம்மாவட்டங்களில் மக்கள் அளித்த தீர்ப்பின் பிரகாரம் இந்த சர்வஜனவாக்கெடுப்பை யூ. என் பி.க்கும் கூட்டணிக்கும் எதிராகஒருநம்பிக்கையில்லாத்தீர்மானமாகக் கருதும்படி தமிழ்க் காங்கிரஸ் கேட்டுக்கொண்டதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இன்னும் ஒரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மாவட்டங்களில் அரசாங்கத்துக்கு எதிராக விழுந்த வாக்குகளைவிட 105,0 00வாக்குகள் இத்தேர்தலில் கூடியுள்ளன.

இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

### யு. என். பி.- கூட்டணி உறவு

யு என். பி.க்கும் கூட்டணிக்குமிடையில் உள்ள நெருங்கிய உறவை இந்த சர்வஜன வாக்கெடுப்பும் தெளிவாகக் காட்டுகின்றது. தமிழ் ஈழத்துக்கான ஆணை பெற்றுவிட்டோம் என்று உரிமைகொண்டாடும் கூட்டணியினர், பிரசாரத்தின் இறுதிக்கட்டத்தில் பானைக்கு அளிக்கும் வாக்கு தமிழ் ஈழம் அமைப்பதற்கான வாக்காகும் என்று அமிர்தலிங்கத்தின் மூலம் கூறியுள்ளார். அமிர்தலிங்கத்தின் இந்தப் பேச்சு யு. என். பி.யின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தினசரிப்பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பேச்சினை அரசாங்கத்துக்கெதிராக வாக்களிக்கத் தீர்மானித்திருந்த சிங்கள மக்கள், கடைசிநேரத்தில் தங்கள் எதிர்ப்பைக் கைவிட்டு அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்க உதவியுள்ளது. பானைக்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் விழுந்துள்ள வாக்குகள், இரண்டு மாதத்துக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகளைவிடக் குறைவாக இருப்பது. இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்கவேண்டாம், பங்கு கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதன் நிமித்தம் 255,000 வாக்காளர்கள் தமிழ் மாவட்டங்களில் வாக்களிக்காததன் நிமித்தம், ஜே ஆர். ஜயவர்த்தன முதல் எண்ணிக்கையிலேயே வெல்வதற்கும் வழிவகுத்தார்கள் என்பதை உலக நாடுகளும் அயல்நாட்டுப் பத்திரிகைகளும் வலியுறுத்தியுள்ளன. அந்தத் தைரியத்தினூடாக சர்வஜன வாக்கெடுப்பைக் கொண்டுவந்து அதையும் வெல்ல வழிவகுத்துவிட்டனர் கூட்டணியினர். இதையும் தமிழ் மக்களும் இளைஞர்களும் மறந்துவிடக்கூடாது. (இ)



பாராளுமன்றத்தின் ஆயுளை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிப்பதற்கான அரசியல் அமைப்பின் 4 வது திருத்த மசோதா பொதுசன வாக்கெடுப்பின் மூலம் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்தன அம்மசோதா சட்டமாவதற்கான கையெழுத்திடுவதைப் படத்தில் காணலாம். வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினிதிஸநாயக்க ஆகியோர் கவனித்துக்கொண்டிருக்கின்றனர்.

## திருவாசகம்-

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் பதம் மந்திரம் சமஷ்டி (தொகுதிலை) 51 அட்சரங்கள் வியஷ்டி (தனிநிலை) அதேபோல திருவாசகம் ஆகிய மந்திரம் சமஷ்டி அதன் 51 அதிகாரங்கள் வியஷ்டிதநிலை அதாவது ஓங்காரத்திலிருந்து மந்திரங்கள் அனைத்தும் பிலப்பைப் போல, ஓங்காரத்திலிருந்தே இந்தத் தமிழ் மந்திரமாகிய திருவாசகமும் பிறந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள இந்நூலின் மந்திரசக்தியை அனுபவித்து சிவானுபவச் சிகரத்தில் வதிந்த இராமலிங்கவள்ளலார்

''வருமொழிசெய் மாணிக்க
வாசகநின் வாசகத்தில்
ஒரு மொழியே என்னையும்
என் உடையனையும்
ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இச்
சாதகமன் சஞ்சலமேன்
குருமொழியைவிரும்பிஅயல்
கூடுவதேன் கூறுதியே''

என்று வாதவூரடிகளை நோக்கி வினவுகின்றார். அதே போல 'மதுரவாசகம் ஓதின் முத்தி உருபயன்' என்கின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்

(நன்றி: திருக்கோயில்)

## நூல் விமர்சனம்

நூல்: நிறுத்திய சிந்துகள் (கவிதைகள்) ஆக்கம்: அ. சி. தமிழினி, 4/-

ஈழத்துக் கவிதைத்துறை இன்று செழித்துச் சிறந்து வளர்ந்துகொண்டிருக்கின்றது. மரபுக்கவிதை எழுதுவோர் என்றும், புதுக்கவிதை எழுதுவோர் என்றும் இரு பிரிவினர் கவிதைப் பணிபுரிகின்றனர்.

''மனதிற்பட்டதை எழுதினேன். வேளைக்கு வேண்டிய வெளிப்பாடுகள் சமகாலத்துக்குத் தேவையாகுமென்ற வாக்குமூலத்துடன் வெளிவந்துள்ள நிறுத்திய சிந்துகள் கவிதைத்தொகுதி காலத்தின் தேவை அறிந்து படைக்கப்பட்ட ஆக்கம் என்பதைத் தொகுதியைப்படிப்போர் எளிதிற் புரிந்துகொள்வர்.

ஒருகருத்தை வெளிப்படுத்த மரபுக் கவிதை உதவுவது போல் புதுக்கவிதையும் உதவும் என்பதை அ. சி. தமிழினி இந்நூலிற் காட்டியுள்ளார்.

ஆக்கப்பட்ட பிரமச்சாரி என்ற கவிதையின் தலைப்பிலேயே ஒரு புதுமை திகழ்கிறது

இதோ அந்தக்கவிதை.
முன்னர் பிறந்தவர்கள்
மூன்றுபேர்—என்
பின்னர் பிறந்தவர்கள்
நன்கு பேர்
முந்தாநாள்
வந்த நோயினில்
தந்தை தாய்
இறந்தவர்கள்
ஐந்துபேர் பெண்களென்றால்
இந்த உலகில்
வந்த பேர் அரசனும்
ஆண்டி என்றே
மொத்தம்
ஏழு சகோதரிகள்
ஏக்கம் கண்ணில்
தனியாளாய் உடன்
பெற்றுவிடப்பட்ட
எட்டாம் புத்திரன் நான்
என்றும் இங்கே
ஆக்கப்பட்ட பிரமச்சாரி

மாதிரிக் கிராமங்கள், போடா உலகத்தைப் புலி, புள்ளி போன்ற கவிதைகள் குறிப்பாக சில விஷயங்களைச் சாடுகின்றன.

இதுதான் ''ராக்கிங்'' என்ற கவிதை ஆசிரியரின் சுயஅனுபவத்திற் பிறந்த ஒன்றாக உள்ளது.

பல சுவை பயக்கும் கவிதைகள் கொண்ட இத்தொகுதி சமகாலப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதாயும் இனிமையும் எளிமையும் கொண்டதாயும் உள்ளது.

-''முரளி''

## யார் இவர்கள்-

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமுன்னரே அந்த இளைஞர்களில் ஒருவர் அருகில் வந்து கேட்கிறார்- ''உமது பெயர் என்ன? எங்கே வேலை?

இவர் பதில் சொல்லிக்கொண்டே அவதானிக்கிறார். அவ்விடத்தில் தாண்டிச் செல்லும் கார்கள் நிறுத்தப்படுவதாகத் தெரியவில்லை போகும்- வரும் சைக்கிள் இளைஞர்கள் நிறுத்தப்படுகிறார்கள்- கேள்விமுறையின்றி சைக்கிள் ரயர்களில் காற்று திறந்துவிடப்படுகின்றது

அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்ததும் இவரைப் போகவிடுகிறார்கள். ஆனல் அவர்கள் யாராய் இருக்கும் என்ற கேள்வி இவர் மனதைவிட்டு இன்னமும் அகலவில்லை

இவ்வாறான சம்பவங்கள் பல இடங்களிலும் நடைபெறுகின்றன பொலிசாரோ, ராணுவத்தினரோ வீதிகளில் கேள்விமுறையின்றி வாகனங்களை நிறுத்தி சோதனையிடுவதற்கு இப்போது உரிமைபெற்றிருக்கிறார்கள். அதே சமயம் இப்படி உரிமை ஏதும் பெறாமலே கொள்ளை-வழிப்பறிகளில் ஈடுபடும் கோஷ்டிகளும்- இயக்கங்களின் பெயரைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆயுதம் தரித்த இளைஞர்களும் ஆங்காங்கே வாகனங்களை நிறுத்தி திசைதிருப்புவதையும் - கொள்ளையடிப்பதையும் கேள்விப்படுகின்றோம்.

எனவே சட்டத்தின் பெயரால் இப்படி சோதனைகளில் ஈடுபடும் பாதுகாவல் படையைச் சேர்ந்தவர்கள் பொது மக்கள் பீதிகொள்ளாமல் அடையாளம் கண்டுகொள்வதற்காக தங்களுக்குரிய சீருடைகளை அணிந்துகொண்டால் என்ன?

கோஷ்டியாக நின்று சோதனையிடுகையில் ஒருவராகுதல் சீருடையில் இருந்தால் அவர்கள் எந்தப் படையைச் சேர்ந்தவர்கள் என்பதை தெரிந்துகொள்வது இலகுவாக இருக்கும் அல்லவா?

மேலும் இளைஞர்களின் சைக்கிள் டயர்களின் காற்றை திறந்துவிட்டு நடந்துசெல்ல செய்வதற்கு துப்பாக்கி அதுவும் யந்திரத் துப்பாக்கிகளும்கூட தேவையா?

உயர் அதிகாரிகளுக்கு இது சமர்ப்பண !

'பேனா,

## அபராதம்

(மன்னார்)

பிஸ்கட் விற்பனையில் 25சதம் லாபம் பெற்ற வர்த்தகர் ஒருவர் 350 ரூபா அபராதம் செலுத்தினார்.

அடம்பனைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 2 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படவேண்டிய 100 கிறாம் பிஸ்கட்டை 2 ரூபா 75 சதமாக விற்பனை செய்தாரென்று மன்னார்விலைக் கட்டுப்பாட்டதிகாரி ஜனாப் எம். ஏ சி.எம். றசீன் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

* வர்த்தக, விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
* விவசாயம்,கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
* நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
* ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் -- உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புளர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழ் மக்களுக்கு நீதிவழங்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது

## தொண்டமான் நம்பிக்கை

(கொழும்பு)

''தமிழ் மக்களின் உரிமைப் போருக்கு நீதிவழங்க வேண்டியது அவசியம் அந்தச் சூழ்நிலையை நடந்துமுடிந்துள்ள பொதுசன வாக்கெடுப்பு மீண்டும்'' அரசுக்கு வழங்கியுள்ளது என்று கிராமிய கைத்தொழில் அமைச்சரும் இ. தொ. காங்கிரஸ் தலைவருமான திரு எஸ். தொண்டமான் கூறினார்.

பொதுசன அபிப்பிராயவாக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பாக கருத்துவெளியிடுகையிலேயே திரு. தொண்டமான் இவ்வாறு கூறியிருக்கிறார்.

பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் அரசுக்கு அமோக வெற்றி கிடைத்திருக்கின்றது இதுவரை தீர்க்கப்படாதிருந்து வரும் மலையக மக்களின் ஏனைய பிரச்னைகளையும் நிரந்தரமாக தீர்த்துவைப்பதற்கு இது வழி சமைத்துள்ளது. எனவே மாற்றுக்கட்சிகளின் எதிர்ப்புக்களை அசட்டை செய்துவிட்டு தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அரசு நிரந்தரமாகத் தீர்வுகாண சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. இதில் அரசு தயக்கம் காட்டத் தேவையில்லை என்று திரு. தொண்டமான் கூறினார். (இ)

## நாட்டு..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

இந்தஇரு பிரமுகர்களினது வாக்குச்சீட்டுக்கள் கொண்டு நடத்தப்பட்ட ஆள்மாறாட்டங்கள், நாடளாவிய பெரும் ஆள்மாறாட்டங்கள் நடைபெற்றுள்ளமைக்கு உதாரணங்களாக விளங்குகின்றன.

இந்த நிலையில் யார் உண்மையான நக்ஸலைட்டுக்கள் என்று ஜனாதிபதியை நான் கேட்கவிரும்புகிறேன்'' என்ருர். [கி]

# உபதபால் அதிபர்களின் 'அலவன்ஸ்' பிரச்னை

(யாழ்ப்பாணம்)

1981ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில், அரசசேவையிலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆகக்குறைந்தபட்சம் 45ரூபா என்று கூட்டப்பட்ட அலவன்ஸ் கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென்று நிதியமைச்சர் திரு. ரொனி டீமெல் அறிவித்தார். ஆனல் இது வரை அந்த அலவன்ஸ் உபதபால் அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை. என்று சம்பளமீளாய்வுச் சபைக்கு சுட்டிக்காட்டப்பட்ட போது, ''எங்களுக்கு அந்த விவகாரம் தெரியாது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாம்!

உபதபால் அதிபர்கள் தொழிற் சங்கங்களின் ஐக்கிய முன்னணியின் இணைப்புச் செயலாளர் திரு. ஐ நடராசா இப்பிரச்னை குறித்து சம்பள மீளாய்வு சபை அங்கத்தவர் திரு. சி, பாலசிங்கத்துக்கு மகஜர் மூலம் தெரிவித்த போது, இந்தப்பிரச்னைபற்றி எதுவுமே தெரியாது என்று கருத்துபட பதில் எழுதப்பட்டுள்ளதாக திரு, நடராசா தெரிவித்தார்.

தபால்அமைச்சர் திரு.விஜய துங்காவை மகஜர் மூலமும், சந்திப்புக்கள் மூலமும் உபதபால் அதிபர்களின் அலவன்ஸ் பிரச்னை கவனத்துக்கு

(7-ம் பக்கம் பார்க்க)


நிறுவனத்தின் முதன்மையான
பங்குதாரர்களை நன்கு
இனங்காட்டுவதற்கும், தாம் அளிக்கவிருக்கும்
தயாரிப்புகளுக்கும் ஏற்ப

ஃபுட் ஸ்பெஷாலிடிஸ்
சிலோன் லிமிட்டெட்

நிறுவனப் பங்குதாரர்கள்
இப்பெயரை

நெஸ்லே லங்கா லிமிட்டெட்

என மாற்றுவதற்கு கம்பெனிச்
சட்ட விதி 20ம் பிரிவுப்படி, கம்பெனிப்
பதிவாளரின் அனுமதியுடன் தீர்மானம்
செய்துள்ளார்கள்.

Nestlé

Grant K & E 4752

# தொகுதிரீதியாக ..

(நேற்றைய தொடர்ச்சி)

### வென்னப்புவ
மொத்த வாக்குகள் 56,885
விளக்கு 27 911
பானை 13 340

**தபால் வாக்குகள்**
விளக்கு 1,619
பானை 720

## தேர்தல் மாவட்டம் 17

### அநுராதபுரம்-மதவாச்சி
மொத்த வாக்குகள் 41,463
விளக்கு 18 896
பானை 7,087

### ஹொரவபொத்தான
மொத்த வாக்குகள் 36 657
விளக்கு 17,421
பானை 8,251

### அநுராதபுரம் கிழக்கு
மொத்த வாக்குகள் 41,615
விளக்கு 16 445
பானை 11,679

### அநுராதபுர மேற்கு
மொத்த வாக்குகள் 42,409
விளக்கு 19 836
பானை 10,813

### கலாவெல
மொத்த வாக்குகள் 54,762
விளக்கு 26 520
பானை 14 588

### மிஹிந்தல
மொத்த வாக்குகள் 28,761
விளக்கு 14,614
பானை 6,761

### கெக்கிராவ
மொத்த வாக்குகள் 32,927
விளக்கு 24,738
பானை 4,605

**தபால் வாக்குகள்**
விளக்கு 1,999
பானை 834

## தேர்தல் மாவட்டம்-18

பொலன்நறுவ

### மின்னேரிய
மொத்தவாக்காளர் 40,329
விளக்கு 14,950
பானை 13,163

### மோதிரிகிரிய
மொத்தவாக்காளர் 43,240
விளக்கு 18,180
பானை 11,835

### பொலன்நறுவ
மொத்தவாக்காளர் 44,055
விளக்கு 17,941
பானை 11,016

**தபால்வாக்குகள்**
விளக்கு 638
பானை 408

## தேர்தல் மாவட்டம்-19

பதுளை

### மஹியங்கன
மொத்தவாக்காளர் 33,514
விளக்கு 21,399
பானை 4,519

### வியாசவ
மொத்தவாக்காளர் 27,455
விளக்கு 13,899
பானை 6,168

### பசறை
மொத்தவாக்காளர் 28,007
விளக்கு 15,807
பானை 5,832

### பதுளை
மொத்தவாக்காளர் 27,419
விளக்கு 13,232
பானை 7,202

### ஹாலிஎல
மொத்தவாக்காளர் 30,598
விளக்கு 14,983
பானை 7,959

### ஊவாபரணகம
மொத்தவாக்காளர் 33670
விளக்கு 19,451
பானை 20,159

### வெலிமட
மொத்தவாக்காளர் 36,128
விளக்கு 20,159
பானை 8,631

### பண்டாரவளை
மொத்தவாக்குகள் 35,570
விளக்கு 14,480
பானை 9,963

### ஹப்புத்தளை
மொத்தவாக்காளர் 27,7 6
விளக்கு 14,368
பானை 6,082

**தபால்வாக்குகள்**
விளக்கு 2.635
பானை 1,399

## தேர்தல் மாவட்டம் - 20

மொனராகல

### பிபில
மொத்தவாக்குகள் 35,895
விளக்கு 20,656
பானை 6,847

### மொனராகல
மொத்தவாக்காளர் 41,675
விளக்கு 20 970
பானை 10,973

### வெல்லவாயா
மொத்தவாக்காளர் 48 988
விளக்கு 15,960
பானை 13,782

**தபால் வாக்குகள்**
விளக்கு 679
பானை 258

## இரத்தினபுரி

### தேர்தல் மாவட்டம் - 21

### எகிலியகொட
மொத்தவாக்காளர் 56,592
விளக்கு 19,647
பானை 20,468

### இரத்தினபுரி
மொத்தவாக்காளர் 61 986
விளக்கு 23 988
பானை 23,760

### பெல்மதுளை
மொத்த வாக்குகள் 38,662
விளக்கு 17,070
பானை 13,00

### பலாங்கொட
மொத்த வாக்குகள் 51,837
விளக்கு 26,712
பானை 14,742

### இரக்வானை
மொத்த வாக்குகள் 51.385
விளக்கு 25,165
பானை 13,028

### நிவித்திகல
மொத்த வாக்குகள் 48.510
விளக்கு 24 962
பானை 13,950

### கலவான
மொத்த வாக்குகள் 32,904
விளக்கு 13,062
பானை 11.126

### கொலன்ன
மொத்த வாக்குகள் 60,326
விளக்கு 23 664
பானை 16,938

**தபால் வாக்குகள்**
விளக்கு 2,809
பானை 1,255

## தேர்தல் மாவட்டம் 22

கேகாலை - டெடிகம
மொத்தவாக்குகள் 57,629
விளக்கு 22,617
பானை 18.479

### கலிகொமுவ
மொத்தவாக்குகள் 45,1(9
விளக்கு 14,307
பானை 16.616

### கேகாலை
மொத்த வாக்குகள் 45,146
விளக்கு 15,814
பானை 14,521

### ரம்புக்கன
மொத்த வாக்காளர் 41,612
விளக்கு 17,812
பானை 13,085

### மாவனல்ல
மொத்த வாக்காளர் 48,873
விளக்கு 16,278
பானை 18.256

### அரநாயக்க
மொத்த வாக்காளர் 34,504
விளக்கு 14,813
பானை 10,180

### யட்டியன்தொட்ட
மொத்தவாக்காளர் 45,811
விளக்கு 24,352
பானை 10,378

### ருவன்வெல
மொத்தவாக்காளர் 47,333
விளக்கு 21,085
பானை 13.966

### தெரணியாகல
மொத்தவாக்காளர் 40,531
விளக்கு 21,085
பானை 10,821

**தபால்வாக்குகள்**
விளக்கு 3,599
பானை 1,932

## ஜம்போறியில் கலந்துகொள்வார்



யாழ் [illegible]லூரி சாரணத் தலைவர்களில் ஒருவரான இராசையா சிறிதரன் இம் மாதம் 23-ம் திகதி இந்தியா பயணமானார். இவர் இந்தியாவிலுள்ள புத்தகாயா என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் 9வது தேசிய ஜம்போறியில் பங்குகொள்வதற்காக இலங்கையிலிருந்து செல்லும் 24 சாரணர்களில் ஒருவராகவும் உதவிக் குழுத் தலைவராகவும் செல்கிறார். இவர் எமது கல்லூரி உதவிச் சாரணத் தலைவராக இருப்பதுடன் ஜனாதிபதி சின்னம் பெற்றவரென்றும் குறிப்பிடத்தக்கது.

## குரும்பசிட்டியில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(மயிலிட்டி)

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரின் 25வது வருட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி குரும்பசிட்டி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது சுமார் 25 கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில்பங்குபற்ற விருக்கின்றன குரும்பசிட்டி உதயதாரகை மன்றம்தமதுவெள்ளிவிழாவை யொட்டி வேறுபல போட்டிகளையும் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தீப்பெட்டி விற்பனை: ரூ: 150 தண்டம்

(மன்னார்)

தீப்பெட்டி விற்பனையில் 10 சதம் லாபம் பெற்ற வியாபாரி ஒருவருக்கு மன்னார் நீதவான் திரு. மடவெல 150 ரூபா அபராதம் விதித்தார்.

வட்டக்கண்டலைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் 40 சதமாக விற்பனை செய்ய வேண்டிய ஒரு தீப்பெட்டியை 50 சதமாக விற்பனை செய்தார் என மன்னார் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ஜனாப் எச். எல். ஏ. குத்தூஸ் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

## உபதபால்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பலதடவை கொண்டுவந்து முடிவில் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அமைச்சர் இதனை சமர்ப்பித்திருந்தார்.

அமைச்சரவையும்உபதபால் அதிபர்களுக்கு 45ரூபா அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்று அங்கீகரித்திருந்தது.

ஆயினும், சம்பள மீளாய்வுச்சபை பதினெட்டு மாதங்களின்பின் ''கைவிரித்திருப்பது'' வேடிக்கையாக இருப்பதாக உபதபால் அதிபர்கள் தொழிற்சங்கங்களின் ஐக்கிய முன்னணியின் இணைப்புச்செயலாளர் திரு. ஐ. நடராசா தெரிவித்தார்.


ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
பணத்தோட்டம்

இன்னும் சிலதினங்கள்
றீகல் [யாழ் நகர்]
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில் எங்கவீட்டுப்பிள்ளை

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

50வது நாளைத்தாண்டி அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க புத்தாண்டுவரை நீடிக்கப்பட்டுள்ளது.
ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

மனோகரா
[யாழ்நகர்] தினசரி 5 காட்சிகள்
TRUE STORY OF BILLY HAYES
IN
MIDNIGHT EXPRESS
(Strictly For Adults Color)

இன்று மட்டும்
சாந்தி யாழ். கடைசித்தினம்: 26-12-82.
10-30, 2-30, 4-30, 7-00, 9-45
NIGEL TERRY - HELEN MIRREN IN
JOHN BOOK MAN'S "Excalibur"
SEX - THRILL - ADVENTURE - COLOR
திகிலூட்டும் மர்மம், மாயாஜாலம், வாள்போர், குதிரைஓட்டங்கள் நிறைந்த பயங்கரப் பிரமாண்ட படைப்பு.

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119,கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.
போன்:23199 தந்தி: வைரம்

# அதி தீவிர சிகிச்சைப் பிரிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைவங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி இலங்கைவங்கி முகாமையாளர் திரு நிஸங்கா விஜயரத்னவுடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சிகளின் பேரில் அண்மையில் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி கருவியை வாங்கிகொடுத்ததுடன் மேலும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வாங்கித்தருவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. லொயிட் பெரேரா எடுத்த முயற்சியின் பேரில் கனடியத் தூதுவராலய அதிகாரி திரு. சொலகொட மேற்குறிப்பிட்ட 65 ஆயிரம் ரூபா பெறுமதியான கருவியை இந்த நிலையத்துக்கு வழங்கியுள்ளார்.

மேலும் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் யாழ். செயலக அதிகாரியுமான திரு. எஸ். பி. பாலசிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியினால், பிரதேச அபிவிருத்தி அமைச்சு 9 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை ஏற்கனவே வழங்கியுள்ளது.

மொத்தமாக இரண்டு கோடி ரூபா கிடைத்தால் உடனடியாக இந்த நிலையம் இயங்கமுடியும்.

## கொழும்பு ஆஸ்பத்திரியில்......

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஒன்பது அதி தீவிர சிகிச்சை நிலையங்கள் பொதுமக்களின் உதவியுடன் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அதேநேரம் கொழும்புக்கு அடுத்த பெரிய யாழ் மாநகரத்தில் இருக்கும் பெரியாஸ்பத்திரியில் ஒரு அதிதீவிர சிகிச்சை நிலையம்கூட இல்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வரிச் சலுகை

அதிக பண உதவி வழங்குபவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுமென யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திரு. நச்சினார்க்கினியன் தெரிவித்தார்.

அதிதீவிர சிகிச்சை நிலையம் கட்டுவதற்கு யாழ். பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள், வட பகுதியில் உள்ள கூட்டுறவு இயக்கங்கள், வர்த்தக வங்கிகள், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பிரபல வர்த்தகர்கள், இலங்கையிலுள்ள தூதுவராலயங்கள், சமூக ஸ்தாபனங்கள் நான்கு லட்சம் ரூபா வழங்கியுள்ளதற்குப் பாராட்டுத் தெரிவித்த வைத்திய அதிகாரி, மேலும் உபகரணங்கள் வாங்குவதற்கு இதுவரை பண உதவி புரிந்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி எஸ் சிவகுமாரன் அதிதீவிர சிகிச்சை நிலையம் இயங்குவதற்கு முன்னின்று பெரு முயற்சிகள் எடுத்து வருகிறார். (மா)

## அடியவர்கள்-

(4ம் பக்கத்தொடர்ச்சி)

தருளுதல்; ஒருமலத்தார் இருமலத்தார்; மும்மலத்தார் மாட்டு நிகழ்வனவாகும்.

சிவபெருமான் கருணைக் கடல், கருணையே உருவமாயவர். மனம் மொழி, மெய் என்னும் திரிகரண சுத்தியாய் வழிபடும் மெய்யடியார்களுக்கு அவர், பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளம் என வந்தருளுவர். அவர்தானே வந்து எம்மைத் தலையளித்தாட் கொண்டருளுபவர். அவர் எம்மைக் காத்தருளி அடிமை கொண்டருளும் அற்புதம் ஊனை உருக்கும் அவரைப்பாடுதல் நங்கடன். (தொடரும்)

## ஆடம்பரமின்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடி ஓசை இம்முறை கேட்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச்சில இடங்களில் பட்டாஸ் சத்தம் கேட்டது.

## சேவை நீடிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நீடிக்கப்பட்டுள்ளது. இச்சேவை இரவு 7-30 முதல் 10-30 வரை நடைபெறும்.


# A/L 83 தூயபிரயோககணிதம்

பகல் நேர வகுப்பு ஆரம்பம்: 3-1-83

| | | |
|---|---|---|
| பிரிவு:- I | 8-00 | Hydrostatics |
| | 9-00 | Calculas |
| பிரிவு:- II | 10-00 | Vectors |
| | 11-30 | Co-ordinate |

ஆசிரியர்: Ravimohan

மணியம்ஸ் கட்டிடம்

ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

[ஸ்ரீதர் சினிமா - நாவலர் ரோட் இடையில்] 5619


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் செல்லப்பா

வீமன்காமம் தெல்லிப்பழையைச்சேர்ந்த மலாயன் பென்சனர். திரு வல்லிபுரம் செல்லப்பா காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 26-ம் திகதி மாலை 4 மணிக்கு உடையார்வளவு வீமன்காமத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும். 5633

## மரண அறிவித்தல்

### முருகேசு சதாசிவம் தியாகராஜா

(ஏழாலை மேற்கு சிவலிங்கம்)

முன்னாள் வவுனியா கச்சேரி சிருப்பர் முருகேசு சதாசிவம் தியாகராஜா [ஏழாலை மேற்கு சிவலிங்கம்] காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும் ஜெயகுமார் (சவூதி அரேபியா], சிவகுமார், சிவநங்கை, கவிதா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் இன்று [26-12-82] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பராயில் நடைபெறும். 5632

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் செல்லையா

நயினாதீவு இராமலிங்கம் செல்லையா காலமானார். இவர் கொழும்பு, யாழ்ப்பாணம் செ. ஆ. செல்லையா அன் கம்பனி, கொழும்பு செல்லம் ஸ்ரோர்ஸ் ஆகியவற்றின் பிரதம பங்காளரும், காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அருமைக் கணவரும், சவுந்தரத்தின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற சரவணமுத்து, சொக்கலிங்கம், இளைப்பாறிய அதிபர் கனகரத்தினம், செல்லையா, ஆசிரியர் நாகேஸ்வரன், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, கனகம்மா, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதிகள் விஜயமங்களம் சாந்தலிங்கம், கிருஷ்ணவேணி நடராசன், பரமேஸ்வரி தனபாலசிங்கம், ஆசிரியர் ஸ்ரீநிவாசமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாமகேஸ்வரனின் பெரிய தந்தையாரும் ஆவார். தகனக்கிரியைகள் 27-12-1982 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். 5631

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் கிருஷ்ணபிள்ளை

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலாயுதம் கிருஷ்ணபிள்ளை நேற்றுக் காலமானார். அன்னார் இந்திராணியின் அன்புக்கணவரும், கந்தசாமி [வைரமாளிகை யாழ்ப்பாணம்], பவளராணி, குணசிங்கம், புஷ்பராணி, வெற்றி வேலாயுதம் [சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை] ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளவல்லி, சித்திரவேல் (மின்தொழில் நுட்பவியலாளர் பட்டினசபை சுன்னாகம்], மாரிமுத்து (டொலர் கூட்டுஸ்தாபனம், தெல்லிப்பளை] ஆகியோரின் மாமனாரும், முகிலன், சிந்து, கிருஷ்ணானந்தன், ஜெயக்குமார் ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பகல் 11 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 5630


# ரூபா 7990/- மட்டுமே

# கொன்டெக்

## • 14" கலர் டிவி

அதியுன்னத பொழுது போக்கு அளிக்கக் கூடிய ஒவ்வொரு அம்சங்களையும் அதற்கு மேலாகவும் அளிக்கக் கூடிய தொலைக்காட்சி பெட்டி



● மேலதிக அம்சங்கள்

1. அதியுயர் உணர் திறனுடைய UHF/VHF தெரிவாக்கியும், உள்ளமைக்கப்பட்ட VHF அன்டனாவும், வெளியிலமைந்த UHF அன்டனா செருகியும் கொண்டது
2. 110 - 250V வரையுள்ள மின்னழுத்தத்தில் 50 அதிர்வுடைய ஆடலோட்ட மின்னில் குறைந்த மின்வலு பாவனையுடன தொழிற்பட மின்னழுத்த சீராக்கி கொண்டது.
3. நிறத்தை கட்டுப்படுத்தும் தன்னியக்க ஆளி கொண்டது.
4. நீண்டகால நம்பிக்கையான தொழிற் பாட்டுக்கென எளிய அடக்கமான அமைப்பு கொண்டது.

கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு பெட்டியுடனும் இறக்குமதி செய்யப்பட்ட அன்டனா இலவசம்

ஏக இறக்குமதி செய்து விற்பனைக்கு பின் சேவை செய்பவர்கள்:-

## லிங்கா எலெக்ரோனிக்ஸ் லிமிட்டெட்

15 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10. தொலைபேசி:- 548627, 548628

விநியோகஸ்தர்கள்

B. H. அல்பேர்ட் டி சில்வா பிரதர்ஸ் — பன்விலை ரோட், வத்தேகம.

பிஸ்னஸ் கொன்ஸல்டன்ட் என்ட் புரமோட்டர்ஸ் லிமிட்டட். — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கோல் பென்ஸி ஹவுஸ் — தர்மபால மாவத்த, மாத்தளை.

ரேடியோஸ்பதி — கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ராதிகா ஜுவலர்ஸ் — கண்டி.

விமலாஸ் — நவீன சந்தை சாவகச்சேரி.

சம்மர் குரூப் — மத்திய வீதி, மட்டகளப்பு.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, ...-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.